வெளி நாடுகளுக்கு தூதர்கள்.

*240 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

1963, 1969, 1970–ம் ஆண்டுகளில் தமிழ்நாடு அரசு, தமிழர்களை தமிழர்கள் வாழும் வெளி நாடுகளில் தூதர்களாக நியமிக்க வேண்டும் என மத்திய அரசிடம் வேண்டுகோள் ஏதேனும் அனுப்பியுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இல்லை.

பொது நூலகங்கள்.

*241 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு கல்வி–உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பொது நூலகங்களின் பணிகளை மட்டும் முழுக்க முழுக்க கவனிக்க தனி இயக்குநர் நியமிக்கும் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம். இப் பதவிக்கு அண்மையில் ஒப்புதல் அளிக்கப்பட்டு இயக்குநரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

*242 வினா—திரு கா. காளிமுத்து : மாண்புமிகு கல்வி–உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தற்போது முகவை மாவட்டத்திலுள்ள நூலகங்கள் எத்தனை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இருநூற்றி ஏழு.

*243 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு கல்வி–உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 28–4–1969–ல் நடந்த வடார்க்காடு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில், அம் மாவட்டத்தில் நடமாடும் நூல் நிலையம் ஏற்படுத்த வேண்டுமென்று தீர்மானித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள முடிவு என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) ஆம்.

(இ) ஆனல் இதுகுறித்து நூலக ஆணைக் குழுவில் தீர்மானம் ஏதும் நிறைவேற்றப்படவில்லை. வட ஆர்க்காடு மாவட்டத்தில் நடமாடும் நூல் நிலையம் ஏற்படுத்த நூலக ஆணைக் குழுவின் நிதி நிலைமை சரியில்லாத தால் இத் தீர்மானத்தைச் செயல்படுத்த முடியாத நிலையில் உள்ளது.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே இப்போது நகரங்களில் இல்லாதவர்கள், மட்டுமல்லாமல், கிராமப்புறங்களில் இருப்பவர்களும் பொது ரீதியான நூல்களைப் படிப்பதற்குச் சிரமப்படுகிருர்கள். அது கிடைப்பது இல்லை. ஆகவே, அந்த ஆலோசனையைக் கனிவோடு கவனித்து, அப்படிப்பட்ட நூலக நிலையங்களை வடார்க்காடு மாவட்டத்தில் ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாவட்ட மக்கள் நலன் கருதி நடமாடும் நூலகங்கள் ஏற்பாடு செய்வது மிக இன்றியமையாதது. ஆனல் அந்த மாவட்டத்திலிருந்து அந்தக் கோரிக்கை வந்தபோது, வடார்க்காடு மாவட்ட நூலக ஆணைக் குழுவிடத்தில் போதுமான நிதி வசதியில்லை. நூலகக் குழுக்களின் நிதி வசதியைச் சரிக்கட்டத் தான் அண்மையில் மூன்று பைசாவிலிருந்து செஸ்ஸை ஐந்து பைசா என்று ஆக்கியிருக்கிறோம். அதன்மூலம் அரசாங்கம் தருகிற ஈட்டுத் தொகையும் அதிகமாக இருக்கும். இதனல் நிதி நிலைமைகள் சரிப்படும். ஆகவே, வடார்க்காடு நூலக ஆணைக் குழுவால் இந்தத் திட்டம் எளிதில் நிறைவேற்றி வைக்கப்படலாம். அதற்கான முயற்சி எடுக்கப்படும்.

*244 *Q.*—THIRU K. S. KOTHANDARAMIAH: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state:—

(*a*) whether there is any proposal to sanction adequate amounts to all high school libraries in Hosur and Denkanikota taluks to purchase Telugu books; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:

(அ) & (இ) இல்லை. இக் கோரிக்கை தனியாகப் பரிசீலிக்கப்படும்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, there is a large demand for Telugu books in the libraries under the Local Library Authorities in Hosur and Denkanikota taluks. We have represented the matter to the District Educational Officer and the Collector there but they have been repeatedly saying that they have no funds for the last so many years. So, may I know whether the Government will be kind enough to make separate arrangements to provide books?